2015 වර්ෂය සඳහා මැතිවරණ දෙපාර්තමේන්තුවේ / මැතිවරණ කොමිෂන් සභාවේ කාර්ය සාධන වාර්තාව

(2015 නොවැම්බර් 16 දින දක්වා - මැතිවරණ දෙපාර්තමේන්තුව)
(2015 නොවැම්බර් 17 දින සිට - මැතිවරණ කොමිෂන් සභාව)

2015 ஆம் ஆண்டின் தேர்தல்கள் திணைக்களத்தின்/ தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை

(2015 நவம்பர் 16 ஆந் திகதி வரை - தேர்தல்கள் திணைக்களம்)
(2015 நவம்பர் 17 ஆந் திகதி முதல் - தேர்தல்கள் ஆணைக்குழு)

PERFORMANCE APPRAISAL REPORT OF THE DEPARTMENT OF ELECTIONS / ELECTION COMMISSION FOR THE YEAR 2015

(Department of Elections – Until 16th November 2015)
(Election Commission – From 17th November 2015)

01. அறிமுகம்.

2015 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் கணக்கெடுப்பு மற்றும் தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டமை, 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலுக்குரிய அலுவல்களை மேற்கொண்டமை, 2015.08.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்குரிய அலுவல்கள் மற்றும் பாராளுமன்றம், மாகாண சபைகள் என்பவற்றின் உறுப்புரிமைப் பதவிகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் அங்கத்தினர் பதவிகள் என்பவற்றின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டமை தொடர்பாக செயலாற்றியமை என்பன 2015 ஆம் ஆண்டில் தேர்தல்கள் திணைக்களம்/ தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட்ட பணிகளெனக் குறிப்பிடலாம்.

02. தேர்தல்கள் திணைக்களத்திற்குப் பதிலாக தேர்தல்கள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல்.

2.1. தேர்தல்கள் திணைக்களத்தின் வரலாறு

2.1.1. புதிய அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக 1944 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த சோல்பரி ஆணைக்குழு, அதன் கீழ் 1946 ஆம் ஆண்டிலும் தேருநர்களைப் பதிவு செய்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துதல் தொடர்பாக சட்ட ஏற்பாடுகளை செய்து 1946 இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரச பேரவை கட்டளைச் சட்டம் 1946 செப்தெம்பர் 26 ஆம் திகதி செயல்வலுப்படுத்தப்பட்டதோடு, உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் நடாத்துவது தொடர்பாக 1946 உள்ளூர் அதிகார சபை கட்டளைச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறு 1946 ஆம் ஆண்டு தொடக்கம் 1955 ஆம் ஆண்டு வரை வாக்காளர்களைப் பதிவு செய்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துதல் என்பவற்றுக்காக தேர்தல்கள் ஆணையாளர் ஒருவரின் கீழ் தனியான திணைக்களமொன்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை நடாத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் ஒருவரின் கீழ் தனியாக திணைக்களமொன்றும் பேணப்பட்டு வரப்பட்டது. 1955 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி அதுவரை காலமும் இருந்து வந்த பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் திணைக்களம் இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு "தேர்தல்கள் திணைக்களம்" உருவாக்கப்பட்டது.

2.1.2. அவ்வாறு உருவாக்கப்பட்ட தேர்தல்கள் திணைக்களம் 06 தேர்தல்கள் ஆணையாளர்களின் கீழ் நிருவகிக்கப்பட்டதோடு, 2015.09.30 ஆம் திகதி அதன் 60 ஆண்டு நிறைவு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. 60 வருட நிறைவின் பின்னர், ஒரு மாதமும் 17 நாட்களும் கழிந்த பின்னர், அதாவது 2015 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதோடு, அதற்கமைய 60 வருடங்கள் ஒரு மாதம் 16 நாட்கள் காணப்பட்ட தேர்தல்கள் திணைக்களம் என்ற பெயர் இல்லாதொழிந்து அது தேர்தல்கள் ஆணைக்குழு என மாற்றமடைந்தது.

2.2. தேர்தல்கள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல்.

2.2.1. தேர்தல்கள் திணைக்களமாகச் செயற்பட்டுவந்த போதிலும் 1980 மற்றும் 1990 ஆகிய தசாப்தங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதைத் தொடர்ந்தும் அத்தாட்சிப்படுத்துவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவொன்றின் தேவைப்பாடு தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தனர். அதற்கமைய 2001 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பில் செய்யப்பட்ட பதினேழாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் முதல் தடவையாக தேர்தல்கள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் தொடர்பான விடயங்கள் அரசியல் யாப்பில் உட்சேர்க்கப்பட்டது. இருப்பினும், பதினேழாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவில்லையென்பதோடு, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தொடர்புடைய சில பணிகளை ஆற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்குக்

கையளிக்கப்பட்டது. அதன் பின்னர், அரசியல் யாப்பில் செய்யப்பட்ட பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் அரசியல் யாப்புத் திருத்தங்களினால் தேர்தல் ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதன் தேவைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கமைய 2015 மே 15 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பத்தொன்பதாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ் உத்தேச தேர்தல்கள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் மேலே குறிப்பிடப்பட்டவாறு 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

2.2.2. தேர்தல்கள் ஆணைக்குழு மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கியதோடு, அதில் ஒருவர் தவிசாளராக நியமனம் செய்யப்படல் வேண்டும். அதற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய, சனாதிபதி சட்டத்தரணி திரு. நளீன் ஜே. அபேசேகர மற்றும் பேராசிரியர் இரத்னஜீவன் எச். ஹூல் ஆகியோர் அரசியல் யாப்பு சபையின் பரிந்துரையின் பெயரில் சனாதிபதி அவர்களால் 2015.11.13 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டனர். மூன்று அங்கத்தவர்களில் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் ஆணைக்குழுவின் முதலாவது தவிசாளராக நியமனம் செய்யப்பட்டதோடு, ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் அனைத்து அங்கத்தவர்களதும் பங்கேற்புடன் 2015.11.17 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்பட்டது.

03. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்

3.1. தேருநர் இடாப்பு மீளாய்வு – 2014

3.1.1. 2014 ஆம் ஆண்டின் தேருநர் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2014.05.16 ஆம் திகதிய 1862/12 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக அவ்வறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான அன்றைய தினச் செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

3.1.2. **2013** ஆம் ஆண்டு வரை வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைக் கணக்கெடுப்பது ஒவ்வோர் ஆண்டும் யூன் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும், தேருநர் இடாப்பைக் குறித்த வருடத்தினுள் அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல் மற்றும் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு 2013, 2014 ஆம் ஆண்டுகளைப் போன்று 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் குடும்பத் தலைவர்களுக்குத் தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்களைப் பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் விதிகளுக்கேற்ப தகைமை பெறும் தினமாகக் கருத்தில் கொள்ளப்படுவது முன்னைய வருடங்களைப் போன்று குறித்த வருடத்தின் யூன் மாதம் 01 ஆம் திகதியே ஆகும்.

3.1.3. **2014** ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்விற்குரிய தேருநர்களைக் கணக்கெடுக்கும் போதும், கடந்த மீளாய்வைப் போன்றே அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் மக்களை அறிவூட்டுவதற்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 01 திகதியை **"தேருநர்களின் தினம்"** என பிரகடனம் செய்து மாவட்ட மட்டத்திலும், தேர்தல்கள் செயலகத்தினாலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு பொது மக்களை அறிவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

3.1.4. உரிமைக் கோரிக்கைகள் / ஆட்சேபனைகள் பரிசீலனை மற்றும் பன்மைப் பதிவுக்குரிய அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டு தேருநர் கணக்கெடுப்பு படிவங்களுடன் (பிசீ படிவங்களுடன்) அனைத்து வாக்காளர்களது பெயர்களும் மீளப் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப்

பதிவு செய்தல் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2014.10.31 ஆம் திகதி தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதோடு, அது தொடர்பாக 20 ஆம் பிரிவின் கீழ் 1886/67 ஆம் இலக்க 2014.10.31 ஆம் திகதிய வர்த்தமானியிலும் மற்றும் பத்திரிகை அறிவித்தல் மூலமும் வெளியிடப்பட்டது.

3.1.5. 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் பதிவு அலுவலரால் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் இடாப்பில் காட்டப்பட்டுள்ள மொத்த பெயர்களின் எண்ணிக்கை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வெளிப்படுத்துகையை அடிப்படையாகக் கொண்டு அரசியல் அமைப்பின் 98(8) உப உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத் தேர்தலொன்றின் போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்குமாக 2014 ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான தேர்தல்கள் ஆணையாளரின் கட்டளை 1898/6 ஆம் இலக்க 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. குறித்த விபரங்கள் **I ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

3.1.6. அதற்கிணங்க, 2014 ஆம் ஆண்டில் 08 ஆம் இலக்க மாத்தறை தேர்தல் மாவட்டம் மற்றும் 10 ஆம் இலக்க யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 1 உறுப்புரிமையால் அதிகரித்ததோடு, 19 ஆம் இலக்க பதுளை தேர்தல் மாவட்டம் மற்றும் 20 ஆம் இலக்க மொணராகலை தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 01 உறுப்புரிமையால் குறைவைக் காட்டி நின்றது. அரசியல் அமைப்பின் 98(8) ஆம் இலக்க உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை தொடர்பான ஒப்பீட்டு வாசகமொன்றை (2006 - 2015) **II ஆம் இலக்க அட்டவணையில்** காணலாம்.

3.2. தேருநர் இடாப்பு மீளாய்வு – 2015

3.2.1. 2015 ஆம் ஆண்டின் தேருநர் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பாகத் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2015.05.15 ஆம் திகதிய 1914/35 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக அவ்வறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான அன்றைய தினச் செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

3.2.2. 2013 ஆம் ஆண்டு வரை வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைக் கணக்கெடுப்பது ஒவ்வோர் ஆண்டும் யூன் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும், 2013 ஆம் ஆண்டின் பின்னர், தேருநர் கணக்கெடுப்பு குறித்த ஆண்டில் மே மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய 2015 ஆம் வருடத்திலும் தேருநர் கணக்கெடுப்பு 2015 மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது இருப்பினும், வாக்காளரொருவராகத் தகைமை பெறும் தினமாகக் கருத்தில் கொள்ளப்படுவது 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் விதிகளுக்கேற்ப குறித்த வருடத்தின் யூன் மாதம் 01 ஆம் திகதியேயாகும்.

3.2.3. சகல தேர்தல் மாவட்டங்களுக்குமுரிய தேருநர் கணக்கெடுப்போடு தொடர்புடைய அறிவுறுத்தல்கள் மாவட்ட பதிவு அலுவலர்களுக்கு 2015.03.11 ஆம் திகதி வழங்கப்பட்டதோடு, மீளாய்வோடு தொடர்புடைய அரசியற் கட்சிகளின் முகவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்து தேர்தல்கள் ஆணையாளரினால் 2015.03.11 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் அறிவூட்டப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

3.2.4. கடந்த வருடங்களைப் போன்று 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய தேருநர்களைக் கணக்கெடுக்கும் போதும் பொதுவாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு மேலதிகமாக யூன் 01 ஆம் திகதி "தேருநர்கள் தினத்தை" அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு தேருநர் தினத்திற்குரிய பிரதான வைபவம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் 2014 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு மீளாய்வின் போது பெரும்பாலான மாவட்டங்களில் பொதுமக்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு தேருநர் தினத்திற்குரியதாக பிரதான வைபவம் நடாத்தப்பட்ட பதுளை மாவட்டம் அடங்கலாக நாட்டில் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நடாத்தப்பட்ட பொதுமக்களை அறிவுறுத்துதல் நிகழ்ச்சித் திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு மாவட்ட பதிவு அலுவலர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் உயர் பங்களிப்புக் கிடைக்கப்பெற்றதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். பதுளை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பிரதான வைபவத்தில் தேர்தல்கள் ஆணையாளர் கலந்து கொண்டார்.

3.2.5. கடந்த வருடங்களைப் போன்றே தகைமையுடைய அனைத்து தேருநர்களையும் தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தடையாகவிருந்த குழுக்களை இனங்கண்டு அவர்களைத் தேருநர்களாகப் பதிவு செய்வதற்குக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அதன் கீழ் நகர்புற வதிவைக் கொண்டுள்ள குறைந்த வருமானம் பெறுவோர், நகர்புற தொடர் மாடிகளில் வதிந்துள்ளோர், வாடகை/ குத்தகை வீடுகளில் வதிந்துள்ளோர், தொழில் நிமித்தம் நகர பிரதேசங்களில் குடியேறியுள்ள நபர்கள், மத்திய, ஊவா, சப்பிரகமுவ ஆகிய மாகாணங்கள் மற்றும் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் அதனோடிணைந்த தொழில்களில் ஈடுபடுகின்ற தமிழ் மொழி பேசுகின்ற மக்கள், வட கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற ஆயுத குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக இடம்பெயர்ந்து நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வதிந்துள்ள மக்கள் மற்றும் மனநோய் வைத்தியசாலையில் சுகம் அடைந்து ஆனால் உறவினர்களால் கையேற்காமை காரணமாக, வைத்தியசாலையில் தொடர்ந்தும் தரித்திருக்கின்ற மக்கள் ஆகியோரைத் தேருநர்களாப் பதிவு செய்வதற்கு முன்னுரிமை வழங்க அனைத்து மாவட்ட பதிவு அலுவலர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

3.2.6. வாக்காளர் தினத்துடன் இணைந்ததாகத் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபைகள்/ நகர சபைகள் அதிகாரப் பிரதேசங்களில் அமையப் பெற்றுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் அமையப் பெற்றுள்ள வீடுகளுக்கு கணக்கெடுப்பு அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் அலுவலக அலுவலர்கள் சென்று கணக்கெடுப்புப் படிவங்களைக் கையளித்தல் 2015.06.02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் காரணமாக உண்மையான வதிவுடையோரை இனம் கண்டு பிசீ படிவங்களைக் கையளிப்பதற்கு முடிந்தமையால், குறிப்பாக பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை உட்சேர்ப்பதற்காக போலியாகப் பெயர்களைப் பதிந்து கொள்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளைக் குறைத்துக் கொள்ள முடிந்ததாக இவ்வலுவல்களைக் கண்காணித்த மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களின் கருத்தாகவிருந்தது.

3.2.7. பிறந்த திகதியை உறுதி செய்யாமை, குடியுரிமை தொடர்பான சிக்கல்கள், கணக்கெடுப்பு காலக்கெடுவினுள் தொழிலுக்காக வீட்டிலிருந்து வெளியேறியிருத்தல் மற்றும் தேருநர் ஒருவராகப் பதிவு செய்வதற்கு ஆர்வம் இல்லாமை போன்ற காரணங்களால் இதுவரை தேருநர் ஒருவராகப் பதியப்பட்டிராத பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் அதனோடிணைந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தமிழ் மொழி பேசுகின்ற மக்களைப் பதிவு செய்வதற்காக கடந்த வருடங்களைப் போன்றே

பெருந்தோட்டத்துறை பிரதேசங்களில் விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று அந்தந்த மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதற்கு தோட்ட அத்தியட்சகர்கள், தோட்ட மக்களுக்கு வசதிகள் வழங்கும் அலுவலர்கள் மற்றும் தோட்டத்துறைசார் பிரதேசங்களில் பணியாற்றுகின்ற கிராம அலுவலர்களின் உதவி பெறப்பட்டதோடு, அதன் மூலம் தேருநர்கள் பெரும் எண்ணிக்கையானோரின் பெயர்களைத் தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது. பூர்வாங்கக் கணக்கெடுப்பு சந்தர்ப்பத்தின் போது பெயர்களை உட்சேர்த்துக் கொள்ள முடியாது போன பெருந்தோட்டத்துறை சார்ந்த பிரதேசங்களில் வதிந்துள்ள தேருநர்களுக்குத் தமது பெயர்களை மேன்முறையீட்டு காலக்கெடுவினுள் உட்சேர்த்துக் கொள்வதற்கு மாவட்ட மட்டத்தில் விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

3.2.8. வடமாகாணத்தில் வரையறுக்கப்பட்ட ஒரு சில பிரதேசங்கள் தவிர்ந்த எல்லா பிரதேசங்களிலும் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு அலுவலர்களின் மூலம் தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கு வாய்ப்புக் கிட்டியது. பொதுமக்கள் இதுவரை குடியேற்றப்பட நடவடிக்கையெடுக்கப்படாத இலக்கம் 10 யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் 03 வாக்கெடுப்புப் பிரிவுகளினுள் 28 வாக்கெடுப்பு மாவட்டங்கள் மற்றும் இலக்கம் 11 வன்னி தேர்தல் மாவட்டத்திற்குரிய மன்னார் வாக்கெடுப்புப் பிரிவின் ஒரு (01) வாக்கெடுப்பு மாவட்டத்திலும் மாத்திரம் வீடுவீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை. வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு நடாத்த முடியாத பிரதேசங்களுக்குரிய வாக்காளர்களின் பெயர்கள் கடந்த வருடங்களைப் போன்று 2015 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் காணப்பட்ட விதத்திலேயே பேணப்பட வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதனோடு தொடர்புடைய வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் என்பவற்றின் விபரங்கள் **III ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

3.2.9. 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேருநர்களைக் கணக்கெடுக்கும் கள அலுவல்கள் 2015 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதமாகும் போது நிறைவு செய்யப்பட்டு, தேருநர் இடாப்பை 2015 ஒக்தோபர் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்ட போதும் வருடத்தினுள் தேசிய மட்டத்தில் இரண்டு தேர்தல்களை நடாத்த வேண்டியேற்பட்டமை, அதற்குரிய கொடுப்பனவு அலுவல்கள் என்பன காரணமாக தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தலை 2015 திசெம்பர் 31 வரை பிற்போட நேரிட்டது.

3.2.10. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேருநர்களைக் கணக்கிடும் கள அலுவல்களை யூலை மாதம் நடுப்பகுதியாகும் போது நிறைவு செய்வதற்கும், 2013 ஆம் ஆண்டின் நடைமுறை தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்களை உள்ளடக்கிய "அ" பட்டியல் மற்றும் நடைமுறை தேருநர் இடாப்புக்கு மீளாய்வின் போது புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்களைக் கொண்ட "ஆ" பட்டியலைத் தயாரிப்பதற்குரிய அலுவல்களை செப்தெம்பர் மாத நடுப்பகுதியில் நிறைவுசெய்து 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களை 2015.10.15 ஆம் திகதி தொடக்கம் 2015.11.12 ஆம் திகதி வரையான 28 நாட்கள் காட்சிப்படுத்துவதற்கும், அக்காலக்கெடுவினுள் பொதுமக்கள் தமது பெயர் தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா மற்றும் உட்சேர்க்கப்பட்டிராவிடின் மேன்முறையீடு சமர்ப்பிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கி குறித்த பட்டியல்கள் அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்கள், அனைத்து உள்ளூராட்சி சபைகளின் அலுவலகங்கள் மற்றும் அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய நடைமுறை தேருநர் இடாப்பில் (2014) அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்குமுரிய நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை 873224 ஆகும். புதிதாக உட்சேர்க்கப்பட்ட பெயர்கள் 1280942 ஆகும். காட்சிப்படுத்தல்

காலக்கெடுவினுள் உரிமை மற்றும் ஆட்சேபனை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. "அ" மற்றும் "ஆ" பட்டியல்கள் காட்சிப்படுத்தல் தொடர்பாக தேருநர்கள் பதிவு சட்டத்தின் 13(2) பிரிவின் கீழான அறிவித்தல் 2015.10.15 ஆம் திகதிய 1936/42 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையிலும் மற்றும் 2015.10.15 ஆம் திகதி அனைத்து தேசிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டது.

3.2.11. தேருநர்களைக் கணக்கிடும் போது கணக்கெடுப்பு அலுவலர்களுடன் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்புப் படிவங்களை (பி.சீ படிவங்கள்) குடும்பத் தலைவர்களுக்குக் கையளித்தல் மற்றும் மீளக் கையேற்றல் அலுவல்களைக் கண்காணிப்பதற்கும் களக் கணக்கெடுப்பு அலுவல்கள் நிறைவுற்றதன் பின்னர் கணக்கெடுப்பு அலுவலர்கள் அலுவலகத்திற்குச் சென்று அவற்றை பரீட்சித்துப் பார்த்து தமது அவதானிப்புக்களைச் சமர்ப்பிப்பதற்கும் முகவர்களை நியமனம் செய்யுமாறு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் கணக்கெடுப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. கணக்கெடுப்பு அலுவலர்களின் அலுவல்களைக் கண்காணிப்பதற்கு அரசியற் கட்சிகளின் முகவர்கள் கண்காணிப்பாளர்களாகக் கலந்து கொள்வார்களாயின் அது பிழையற்ற தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதற்கு பெரிதும் உதவுமென்பதால் அது தொடர்பாகக் கவனம் செலுத்தி இவ்வாய்ப்பு 1981 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. வாக்கெடுப்பு சந்தர்ப்பமொன்றிலோ அல்லது கட்சி ஆதரவாளர் ஒருவரிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பமொன்றிலோ தமது கட்சி ஆதரவாளர்களின் வாக்குரிமை இழக்கப்பட்டுள்ளதென குற்றம் சுமத்தாது, கணக்கெடுப்பு சந்தர்ப்பத்திலே தமது முகவர்களைக் கலந்து கொள்ளச் செய்து அவ்வலுவல்கள் பிழையின்றி மேற்கொள்ளப்படுகின்றனவென உறுதி செய்து கொள்வது அனைத்து அரசியற் கட்சிகளதும் பொறுப்பொன்றாகும். இருப்பினும், அதற்கு தமது முகவர்களை நியமனம் செய்கின்ற அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மிகவும் வரையறுக்கப்பட்டதென்பதோடு, அவ்வாறு நியமனம் செய்யப்படுகின்ற தொகையிலும் இப்பணிகளில் பங்கு பற்றுவோரின் எண்ணிக்கை மிகச் சொற்பமாகும். அதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு மீளாய்வின் போது முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட 2015 மீளாய்வின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் கட்சிகளினால் நியமனம் செய்யப்பட்ட முகவர்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் உண்மையாக இப்பணிகளில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான ஆவணமொன்றுடன் குறித்த விடயங்கள் 2015 மீளாய்வு அலுவல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கட்சி செயலாளர்களை அறிவூட்டி அனுப்பப்படுகின்ற கடிதத்துடன் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதனூடாக, தமது முகவர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு செயலாளர்களினால் தேவையான நடவடிக்கையெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் மீளாய்வுக்காக கட்சி முகவர்களை நியமனம் செய்த அரசியற் கட்சிகள், நியமனம் செய்யப்பட்ட தொகை மற்றும் கணக்கெடுப்புப் பணிகளில் கலந்து கொண்ட முகவர்கள் தொடர்பான விபரங்கள் **IV ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

3.2.12. 2015 ஆம் ஆண்டின் மீளாய்வின் போது கணக்கெடுப்பு அலுவலர்களினால் கணக்கெடுப்பு படிவங்கள் (பிசீ படிவம்) பரீட்சித்துக் கையேற்றலின் போது, குடும்பத் தலைவர்களினால் உட்சேர்க்கப்பட்டுள்ள இருப்பினும் பல்வேறு காரணங்களின் பேரில் கணக்கெடுப்பு அலுவலர்களினால் பரிந்துரைக்கப்படாத மற்றும் 2014 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டில் முழுமையாக வீட்டிலிருந்து வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ள மற்றும் பீசி படிவங்களைக் கையளிக்காத காரணத்தினால் நீக்கப்பட்டுள்ள பெயர்கள் குறித்த குடும்பத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. குடும்பத் தலைவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட பதில்களுக்கிணங்க ஏற்றுக் கொண்டு "ஆ" பட்டியல்படுத்தல், ஏனைய அனைத்து கோரிக்கைகளும் குறித்த காலக்கெடுவினுள் கிடைக்கப் பெற்ற உரிமை கோரிக்கைகளாகக் கருதி விசாரணைக்காக அழைத்து விசாரணையின் போது தெரிய

வந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக் கொள்ள முடிந்த வாக்காளர்களின் பெயர்களைத் தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

3.2.13. "அ" மற்றும் "ஆ" பட்டியல்கள் காட்சிப்படுத்தலின் கீழ் 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரியதாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழும் மாவட்ட பதிவு அலுவலர்களுக்கு உரிமை கோரிக்கைகள் 74696 உம் மற்றும் ஆட்சேபனைகள் 1111 உம் கிடைக்கப்பெற்றன. இது தொடர்பான பரிசீலனைகள் ஒக்தோபர் மாதத்தில் நடாத்தி நிறைவு செய்யுமாறு மாவட்டப் பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கிணங்க தேர்தல் மாவட்ட மட்டத்தில் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் ஆட்சேபனைகள் எண்ணிக்கை, அவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை என்பன தொடர்பான விபரங்கள் **V ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

3.2.14. 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் பன்மைப் பதிவுகள் தொடர்பாக கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்டவாறே அந்நிகழ்ச்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது,

- மாவட்டத்தினுள் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்களுக்கிடையில் பன்மைப் பதிவு
- மாவட்டத்தினுள் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்கள் மற்றும் மாவட்டத்திற்குரிய நடைமுறை ஆண்டின் (2014) தேருநர் இடாப்பின் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கிடையில் பன்மைப் பதிவு
- மாவட்டத்தினுள் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்கள் மற்றும் ஏனைய அனைத்து மாவட்டங்களில் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்களுக்கிடையில் பன்மைப் பதிவு மற்றும்
- மாவட்டத்தினுள் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்கள் மற்றும் ஏனைய அனைத்து மாவட்டங்களதும் நடைமுறை ஆண்டின் தேருநர் இடாப்பில் காட்டப்பட்டுள்ள பெயர்களுக்கிடையில் பன்மைப் பதிவு

ஆகிய தகவல்கள், பன்மைப் பதிவுக்குரிய விடயங்களை பரீட்சிக்கும் முறைகளூடாக பரீட்சிக்கப்பட்டது. அதன் கீழ் குறித்த தேருநர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது தேசிய அடையாள அட்டை இலக்கமொன்றின் கீழ் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான நபர்கள் உள்ள சந்தர்ப்பங்களும் தெரியவந்தன. பன்மைப் பதிவு தெரியவந்த 129882 தேருநர்களின் பெயர்கள் 2015 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டதோடு, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரியதாக பன்மைப் பதிவு காரணமாக நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் **VI ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

3.2.15. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வாக்களிப்பதற்காகச் செல்லுபடியான அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டமையினால் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் போது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டுள்ள அனைத்து வாக்காளர்களதும் அடையாள அட்டை இலக்கங்களைக் குறித்து கொள்வதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்திருப்பினும் தேருநர் இடாப்பு தயாரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள கணனி நிகழ்ச்சித் திட்டதிற்கிணங்க அடையாள அட்டை இலக்கங்களின் பிழையான சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு அவற்றை ஆட்பதிவு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும், வாக்காளர்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதனூடாக பெருமளவான அடையாள அட்டைகளின் இலக்கங்களை சரி செய்து கொள்ள முடிந்தது. தேசிய

அடையாள அட்டை இலக்கங்களைத் தேருநர் இடாப்பில் உட்சேர்த்தமை காரணமாக பல்வேறு தேவைகளின் நிமித்தம் பல இடங்களில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு வாக்காளர்கள் முயற்சிப்பதைத் தடுப்பதற்கு வாய்ப்புக் கிட்டியது. 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய தேசிய அடையாள அட்டைகளின் விபரங்களைச் சமர்ப்பித்த நபர்களின் விபரம் **VII ஆம் இலக்க அட்டவணையிலும்** 2006 – 2015 ஆம் ஆண்டுகளில் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது தேசிய அடையாள அட்டைகளின் விபரங்களை சமர்ப்பித்த நபர்களின் எண்ணிக்கை தொடர்பான ஒப்பீட்டு வெளிப்படுத்துகை **VIII ஆம் இலக்க அட்டவணையிலும்** காட்டப்பட்டுள்ளது.

3.2.16. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குமுரிய அடையாள அட்டையில்லாத நபர்களின் எண்ணிக்கை மற்றும் அடையாள அட்டைகள் இதுவரை பெற்றுக் கொள்ளாமைக்கான காரணம் அதாவது பிறந்த திகதியை உறுதி செய்து கொள்வதற்கு பிறப்புச் சான்றிதழ் அல்லது வேறு ஏதேனும் ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாமை, அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்ள ஆர்வமின்மை மற்றும் ஏனைய காரணங்களால் 2015 மீளாய்வின் போது கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அத்தகவல்களை ஆட்பதிவு ஆணையாளருக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டதோடு, அதன் அடிப்படையில் ஆட்பதிவு திணைக்களத்தினால் அப்பிரிவினரை இலக்காகக் கொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2015 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது.

3.2.17. இலஞ்ச சட்டத்தின் கீழ் மற்றும் தேர்தல் சட்டங்களின் கீழ் தேர்தல்களின் போது மேற்கொண்ட தவறுகள் மற்றும் வேறு காரணங்களின் பேரில் சிறைத் தண்டனை அனுபவித்தல் காரணமாக 2015 ஆம் ஆண்டில் தேர்தல் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட இரண்டு நபர்களின் பெயர்கள் தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்பட நடவடிக்கையெடுக்கப்பட்டது. வெவ்வேறு காரணங்களினால் நீக்கப்பட்ட பெயர்களுக்குரிய விபரங்கள் **IX ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளன.

3.2.18. தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னர் வரைவு தேருநர் இடாப்பு 2015.12.23 ஆம் திகதி தொடக்கம் 2015.12.28 ஆம் திகதி வரை திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிக்கு வைக்கப்பட்டது. அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டு தனது பெயர் தேருநர் இடாப்பில் உட்சேர்க்கபட்டுள்ளதாவென்பதைப் பரீட்சித்துப் பார்த்து பெயர்கள் உட்சேர்க்கப்படவில்லையெனில், 2015.12.28 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அறிவிக்குமாறு 2014 மீளாய்வைப் போன்றே 2015 ஆம் ஆண்டிலும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

3.2.19. 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2015.12.31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் 1947/33 ஆம் இலக்க 2015.12.31 ஆம் திகதிய வர்த்தமானியிலும் அன்றைய தினச் செய்திப் பத்திரிகைகளிலும் அறிவித்தல்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டன.

3.2.20. 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தேர்தல் மாவட்டங்களுக்கிணங்க **X ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய வாக்கெடுப்புப் பிரிவுகளின் வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான ஒப்பீட்டுக் குறிப்பு ***XI ஆம் இலக்க அட்டவணையில்*** காட்டப்பட்டுள்ளது.

3.3 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம்.

3.3.1. கடந்த அண்மைய காலத்தில் பயங்கரவாதிகள் அல்லது வேறு குழுக்களின் நடவடிக்கைகளின் பெறுபேறாக சில நபர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளதால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை அவ்வாறு இடம்பெயர்வதற்கு முன்னர் அவர்களின் நிரந்தர இருப்பிடம் அமையப் பெற்றுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு அவ்வாறு உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு மற்றும் வாக்களிக்கத் தகைமை கொண்ட அவர்களது குழந்தைகளுக்கு இயலுமை பெறச் செய்வதற்காகக் குறித்த சட்டம் 2013 யூன் மாதம் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

3.3.2. 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின்) செயற்பாட்டுக்காலம் இரண்டு வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தமையால், 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது அச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதற்றமையால் ஆர்வம் காட்டுகின்ற அரசியல் கட்சிகள் சில தேர்தல்கள் ஆணையாளரை உசாவியதோடு, அதற்கமைய ஏற்பாடுகளை மேலும், இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கான அலுவல்கள் குறித்த அரசியல் கட்சிகளால் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டன.

04. சனாதிபதித் தேர்தல் - 2015.01.08

4.1. 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் தனது பதவிக்காலம் இன்னும் 02 வருடங்கள் மீதமாகவிருக்கும் போது அரசியல் அமைப்பின் 31(3)(அ) உறுப்புரைக்கிணங்க மேலதிக காலமொன்றுக்குப் பதவி வகிக்கும் பொருட்டு ஆணையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களிடம் தனது விருப்பத்தை 2014.11.20 ஆம் திகதி பிரகடனப்படுத்தினார். அதற்கிணங்க தேர்தல்கள் ஆணையாளரால் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2014.11.21 ஆம் திகதிய 1889/31 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதோடு, அவ்வறிவித்தல் மூலம் வேட்புமனுக்களைக் கையேற்றல் 2014.12.08 ஆம் திகதியும் தேர்தலை நடாத்தல் 2015.01.08 ஆம் திகதியுமென நிர்ணயிக்கப்பட்டது. அதற்கிணங்க 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஏழாவது சனாதிபதித் தேர்தலுக்கான பூர்வாங்க அலுவல்களை 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

4.2. வேட்புமனுக் கையேற்றல் 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதிக்குத் தீர்மானிக்கப்பட்டமை காரணமாக போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கின்ற வேட்பாளர்கள் 2014 திசெம்பர் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கட்டுப்பணங்களை வைப்புச் செய்தல் வேண்டும். அதற்கமைய உரிய தினமாகும் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 17 வேட்பாளர்களும் மற்றும் ஏனைய இரண்டு வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை வைப்புச் செய்திருந்தனர்.

4.3. வேட்புமனுக் கையேற்றல் 2014.12.08 ஆம் திகதி இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்றதோடு, கட்டுப்பணம் செலுத்திய அனைத்து வேட்பாளர்கள் சார்பாகவும் வேட்புமனுக்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு விதிக்கப்பட்ட நேரத்தினுள் கையளிக்கப்பட்டன. வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணையாளரினால் அவ்வேட்புமனுக்கள் பரீட்சிக்கப்பட்டு அவை ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையாவென்பது வெளியிடப்பட்டது. அதற்கமைய கையளிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கையளிக்கப்பட்டிருந்தமையினால் அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டது. வேட்புமனுக் கையளித்தல் வேட்பாளர்களின் பெயர்பட்டியல் **XII ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.**

4.4. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் தொடர்பான அறிவித்தல் 2014.11.21 ஆம் திகதி வெளியிடப்பட்டமைக்கமைய குறித்த சட்டத்தின் 23(2) ஆம் பிரிவிற்கமைய தேர்தல் கடமைகளில் தொடர்புபடுகின்ற அரச அலுவலர்களுக்கு அஞ்சல் வாக்கு வசதிகளை செய்ய வேண்டியிருந்தது. அதற்கமைய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2014.11.30 ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த காலம் வேட்புமனுக் கையேற்கும் இறுதித் தினமான 2014.12.08 ஆம் திகதி வரை 8 நாட்கள் நீடிக்கப்பட்டது. இத்தேர்தலில் அஞ்சல் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் 626,953 கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 541,452 ஆகும். அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்காக 2014.12.23 மற்றும் 24 ஆகிய இரு தினங்கள் நிர்ணயிக்கப்பட்டதோடு, அத்தினங்களில் அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களைத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கையேற்று அவற்றை அடையாளமிடுவதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் 2014.12.30 மற்றும் 2015.01.03 மற்றும் 2015.01.06 ஆகிய தினங்களில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

4.5 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டமையினால் சனாதிபதித் தேர்தலுக்காக 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை பயன்படுத்துவதற்கு முடிந்தது. அதன் காரணமாக 3 இலட்சத்திற்கு அண்மித்த புதிய வாக்காளர்களுக்கு இத்தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியது. 2014 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்புக்கமைய வாக்காளர்களின் எண்ணிக்கை 1,50,44,490 ஆகும். வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை 12021 ஆகக் காணப்பட்டதோடு, பெண் வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் அடங்கலாக மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12314 ஆகும். அவற்றில் 8898 நிலையங்கள் அரச பாடசாலை கட்டிடங்களில் அமைக்கப்பட்டன.

4.6. 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய தேர்தலொன்றின் போது வாக்குச் சீட்டொன்றை எவரேனும் வாக்காளரொருவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் வாக்காளரின் தேசிய அடையாள அட்டைக்கமைய அடையாளம் காணப்படல் வேண்டும். இருப்பினும், எவ்வித தடைகளுமின்றி தேசிய அடையாள அட்டைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் வரை மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு நிறைவடையும் வரை வேறு ஆளடையாள ஆவணங்களையும் வாக்களிப்பு பணிகளுக்காக ஏற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஆளடையாள ஆவணமொன்று இல்லாத வாக்காளர்களுக்குத் தேர்தல்கள் திணைக்களத்தினால் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கும் கடந்த தேர்தல்களுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளை மீண்டும் செல்லுபடியானதாக மாற்றி பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய சனாதிபதித் தேர்தலின் போது புதிதாக 206,609 தற்காலிக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டதோடு, இற்றைப்படுத்தப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 18134 ஆகும்.

4.7. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கமைய பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கமைய வாக்காளர்களின் பதிவு விபரங்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2014.12.20 ஆம் திகதி அஞ்சல் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டது. தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர்கள் வாக்கெடுப்பு நெருங்கும் காலப்பகுதி வரை வெளிநாட்டிலிருத்தல் மற்றும் இறப்பெய்தியவர்களின் விபரங்கள் கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த தகவல்கள் உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் இலட்சிணையொன்றினூடாக பொறிக்கப்பட்டது. மேலும் தேர்தலின் போது அஞ்சல் வாக்காளர்களின் பெயர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளிலும் பொறியிடப்பட்டன. வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேருநர் இடாப்புக்களிலும் வெளிநாடு சென்றுள்ளமை,

இறப்பெய்தியுள்ளமை மற்றும் அஞ்சல் வாக்காளர்களின் விபரங்கள் குறித்து அனுப்பி வைக்கப்பட்டதோடு, அதன் ஊடாக ஆள்மாறாட்ட வாக்களிப்பைத் தவிர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

4.8. 17 ஆம் அரசியல் யாப்புத் திருத்தத்திற்கமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளாக

4.8.1. அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் ஊடக வழிகாட்டு நெறிகளை விநியோகித்தல்.

4.8.2. அரச சொத்துக்கள் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்தல்.

4.8.3. தேர்தல்கள் செயலகம் மற்றும் அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் முறைப்பாட்டு நிலையங்களைத் திறந்து பொறுப்புமிக்க அலுவலர்களை நியமனம் செய்து முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

4.8.4. வேட்பாளர் ஒழுக்கநெறிக் கோவையை அறிமுகம் செய்தல்.

4.8.5. தேர்தல் கடமைகளுக்காக நியமனம் செய்யப்படுகின்ற பொலிஸ் அலுவலர்களுக்கு வழிகாட்டல் அறிவுறுத்தல்களை பொலிஸ்மா அதிபரூடாகப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

4.9. போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 117(1) ஆம் பிரிவிற்கமைய இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினூடாக இலவச பிரச்சார வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, போட்டியிடுகின்ற 19 வேட்பாளர்களுக்காக அவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்ட மொத்த பிரச்சார காலப்பகுதி 28 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களாகும்.

4.10. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் பணிகளுக்காக அரச திணைக்களங்கள்/ நிறுவனங்களில் பணியிலீடுபட்டுள்ள உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள 200000 இற்குக் கிட்டிய அரச அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். வாக்கெண்ணல் 1419 வாக்கெண்ணல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டதோடு, இவற்றில் 304 அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களாகும்.

4.11. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களின் கண்காணிப்புக்காக உள்நாட்டு/ வெளிநாட்டு கண்காணிப்பு நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்களில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறை செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV), வாக்கெடுப்பு நிலையத்தைச் சூழவும் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளும் கண்காணிப்பாளர்களை நிறுத்தி கண்காணிப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு, மேலும் 4 உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தின் வெளியிலிருந்து கண்காணிப்புச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெண்ணல் அலுவல்கள் மற்றும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் அலுவல்கள் என்பவற்றைக் கண்காணிப்பதற்காக கண்காணிப்பு அமைப்புக்களின் கோரிக்கை இதற்கு முன்னர் தேர்தல்களின் போது கிடைத்த போதும் அதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை இருப்பினும், சனாதிபதித் தேர்தலின் போது தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களின் வாக்கெண்ணல் அலுவல்கள் மற்றும் பெறுபேறுகளை அட்டவணையில் பதிதல் அலுவல்களைக் கண்காணிப்பதற்குக் கண்காணிப்பு அமைப்புக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்கு மேலதிக தேர்தல்கள் செயலகத்தில் இறுதிப் பெறுபேற்றைத் தயாரிக்கும் அலுவல்களைக் கண்காணிப்பதற்கும் கண்காணிப்பு அமைப்புக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

4.12. வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களாக ஆசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கம் (AAEA) மற்றும் தெற்காசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கம் (FEMBoSA) ஆகிய அமைப்புக்களின் கண்காணிப்பாளர்கள் நேரடியாக தேர்தல்கள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பில் கலந்து கொண்டதோடு, பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் தொடர்பான முழுமையான ஒருங்கிணைப்பு அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

4.13. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலுக்குரியதாக அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களிடத்தில் காணப்பட்ட சந்தேகங்களை இல்லாதொழிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் வேட்பாளர்களை அறிவுறுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, வாக்கெண்ணல் அலுவல்கள் மற்றும் பெறுபேறுகளை அட்டவணையில் பதிதல் அலுவல்களின் கண்காணிப்புக்காக இதற்கு முன்னர் தேர்தல்களின் போது மாவட்டத்தினுள் மாத்திரம் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் இந்த சனாதிபதித் தேர்தலின் போது இறுதி மொத்த பெறுபேறு தயாரிக்கப்பட்ட தேர்தல்கள் செயலகத்தின் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் அலுவல்களை கண்காணிப்பதற்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/ முகவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவ்வாறு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக சனாதிபதித் தேர்தலுக்குரிய வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் இடங்களுக்கு ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையொன்று வாக்கெண்ணல் தொகுதி மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்களின் அளவுக்கமைய முகவர்களை நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெண்ணல் மண்டபங்களுக்குத் தேவையான பாதுகாப்பு பொலிஸாரினால் வழங்கப்பட்டது.

4.14. தேர்தலுக்குத் தேவையான பொருட்களாதியவை மற்றும் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் 2015.01.07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்கடுத்த தினம் அதாவது 2015.01.08 ஆம் திகதி வாக்கெடுப்பை நிறைவு செய்து வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெண்ணல் நிலையங்களுக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர், தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய வாக்கெண்ணலுக்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பெறுபேற்றைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கையிடுவது தெரிவத்தாட்சி அலுவலர்களின் பொறுப்பாகும். அவ்வாறு தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற வாக்கெண்ணல் மண்டப மட்டத்திலான பெறுபேறுகளிலிருந்து மாவட்டத்தின் வாக்கெடுப்புப் பிரிவு மற்றும் மாவட்ட பெறுபேறுகள் தயாரித்தல் தேர்தல்கள் செயலகத்தின் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பெறுபேறுகளைத் தயாரித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தனர். இந்த சனாதிபதித் தேர்தலின் போது தேர்தல்கள் செயலகத்தில் பெறுபேறுகளை அட்டவணையில் பதிதல் பதவிநிலை அலுவலர்களை உள்ளடக்கிய குழுவொன்றினாலும் பெறுபேறுகளைக் கையினால் தயாரித்தல், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவினால் கணனியூடாக பெறுபேறுகளைத் தயாரிப்பதற்கு மேலதிகமாக மாவட்டங்களின் பெறுபேற்று ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு வரவழைக்கப்பட்டு தேர்தல்கள் செயலகத்தின் கணனிப் பிரிவிலும் பெறுபேறுகளைத் தயாரித்தல் ஆகிய மூன்று வழிகளில் பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டன. அதற்கமைய தேர்தல்கள் செயலகத்தில் மூன்று பிரிவுகளின் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணங்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட இறுதி பெறுபேறு பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அந்நான்கு முறைகளிலுமான பெறுபேறுகளும் சமமானதாக காணப்படுமாயின், மாத்திரம் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்ட மட்டத்தின் போது வாக்கெடுப்புப் பிரிவு மற்றும் மாவட்ட இறுதிப் பெறுபேறு தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், பிரகடனப்படுத்தப்பட்டதோடு, பெறுபேறுகள் சரியானதென உறுதி செய்து கொள்ளப்பட்டதன் பின்னர், தேர்தல்கள் ஆணையாளரினால் பெறுபேறுகள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் ஊடாக பிரச்சாரம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

4.15. மேற்குறித்த முறையில் 22 தேர்தல்கள் மாவட்டங்களுக்குரிய பெறுபேற்று ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர், ஒவ்வொரு வேட்பாளருக்கும் சார்பாக அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணையாளரால் கணக்கிட்டு பார்க்கப்பட்டு சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் யாரென்பது தேர்தல்கள் ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். அதற்கமைய வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு சனாதிபதித் தேர்தலின் போது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 12,123,452 இல் சரிபாதியான 6,061,726 என்ற எண்ணிக்கையை விட அதிகமாக 155436 வாக்குகளுடன் மொத்தமான 6217162 வாக்குகள் பெற்றிருந்தமையால் 2015 சனாதிபதித் தேர்தலுக்குரியதாக விருப்புக்களை எண்ணுவதற்கான தேவைப்பாடொன்று ஏற்படவில்லை. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 64(2) பிரிவிற்கமைய வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக 2015.01.09 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரினால் தேர்தல்கள் செயலகத்தில் வைத்து பிரகடனம் செய்யப்பட்டது. வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற அறிவித்தல் 2015.01.09 ஆம் திகதிய 1896/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் **XIII ஆம் அட்டவணையில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

05. பாராளுமன்றத் தேர்தல்கள் - 2015.08.17

5.1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரை மற்றும் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் ஏழாவது பாராளுமன்றம் 2015 யூன் மாதம் 26 ஆம் திகதி கலைக்கப்பட்டது. 2015 யூன் மாதம் 26 ஆம் திகதிய 1920/38 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 2015.08.17 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கும் அதற்கான வேட்புமனுக்களைக் கையேற்றல் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் 2015 யூலை மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு யூன் மாதம் 13 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு நிறைவுசெய்வதற்கு விதிக்கப்பட்டது.

5.2. பாராளுமன்றத்தைக் கலைத்தல் அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நடைமுறை தேருநர் இடாப்பான 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கமைய அரசியல் யாப்பின் 98(8) உறுப்புரையின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான கட்டளை தேர்தல்கள் ஆணையாளரினால் 2015.01.19 ஆம் திகதிய 1898/06 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

5.3. வேட்புமனு அறிவித்தலில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் சார்பாக அந்தந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலராக வேட்புமனுக்களைக் கையேற்பதாகவும் இரண்டு நிருவாக மாவட்டங்களைக் கொண்ட யாழப்பாணத் தேர்தல் மாவட்டம் (யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி) சார்பாக யாழப்பாண மாவட்டச் செயலாளரும் மூன்று நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கிய (வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு), வன்னி தேர்தல் மாவட்டத்திற்காக வவுனியா மாவட்டச் செயலாளரும் வேட்புமனுக்களைக் கையேற்பார்களென அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

5.4. 22 தேர்தல் மாவட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்து 312 வேட்புமனுக்களும், சுயேச்சைக் குழுக்களிடமிருந்து 225 வேட்புமனுக்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் முறையே அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 12 வேட்புமனுக்களும் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 24 வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 300 வேட்புமனுக்களும், சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 201 வேட்புமனுக்களுமாக

மொத்தம் எண்ணிக்கை 501 ஆகும். அதிக எண்ணிக்கையான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டதோடு, அவ்வெண்ணிக்கை 21 ஆகும். தேர்தல் மாவட்டமொன்றில் போட்டியிட்ட ஆகக் கூடுதலான சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை 30 ஆகும். இவ்வேட்புமனுக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கையளிக்கப்பட்டிருந்தன. 2015 பாராளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 3653 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2498 வேட்பாளர்களுமாக மொத்தம் 6151 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். பாராளுமன்றத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 64 காணப்பட்ட போதும் அவற்றில் 35 அரசியல் கட்சிகள் மாத்திரம் போட்டியிட்டன. 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 04 மாத்திரமாகும். அவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி என்பனவாகும்.

5.5. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆம் பிரிவிற்கமைய முன்னர் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் நூற்றுக்கு ஒன்றை விட குறையாத வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஏதெனுமொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்குக் குறித்த தேர்தலின் போது அத்தேர்தல் மாவட்டத்திற்காக வேட்புமனுக் கையளித்திருப்பின், அவ்வங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அரசின் உதவியாக நிதியுதவி பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு. அத்தொகை அக்கட்சியினால் பெற்றுக் கொண்ட ஒரு வாக்கிற்கு 50 சதம் வீதம் கணக்கிடப்பட்ட தொகையாகும். அதற்கமைய 2015 பொதுத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகிய கட்சிகளுக்கு அரச நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்து கிடைத்தது. அக்கட்சிகள் சார்பாக செலுத்தப்பட்ட முழுத்தொகை 37,18,317 ரூபாவாகும்.

5.6. 2015.08.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்காக 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு செல்லுபடியான இடாப்பாகக் கொள்ளப்பட்டதோடு, அதில் பதிவு செய்யப்பட்டிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 15,044,490 ஆகும்.

5.7. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26(1) பிரிவின் கீழ் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரித்துப் பெற்றவர்களின் வசதிக்காக தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாக அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டதோடு, கொழும்பு மாவட்டத்தில் 17 இடங்களில் காட்சிப்படுத்தி கணனியூடாக குறித்த தகவல்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் செயலகம் என்பவற்றிலிருந்து தொலைபேசியூடாகவும், தொலைநகல் ஊடாகவும் மற்றும் மின்னஞ்சல் செய்திகள் ஊடாகவும் அஞ்சல் வாக்கு விபரங்களை கோரியவர்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் மற்றும் அரச தகவல் மையத்தினூடாக 1919 ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அஞ்சல் வாக்கு விண்ணப்பம் செய்வதற்கு குறுகிய காலமொன்று சட்டத்தினால் விதிக்கப்பட்டிருந்தமை காரணமாக மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அஞ்சல் வாக்கிற்காக சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள காலம் ஒரு வாரத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதும் வேட்புமனு இறுதித் தினம் அதாவது 2015.07.13 ஆம் திகதி வரை அது நீடிக்கப்பட்டது. குறித்த காலப்பகுதியினுள் 627,728 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதோடு, அதில் 567,780 விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதிப் பக்கெற்றுக்கள் 2015.07.25 ஆம் திகதி அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதோடு. அவற்றை அடையாளமிடுவதற்காக 2015.08.05 மற்றும் 2015.08.06 ஆகிய இரு தினங்கள் குறித்தொதுக்கப்பட்டிருந்ததோடு. தமது அஞ்சல் வாக்குகளை மேற்படி குறிப்பிட்ட தினங்களின் அடையாளமிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காத அஞ்சல் வாக்காளர்களுக்கு 2015.08.11 ஆம் திகதி மு.ப 8.30 தொடக்கம் பி.ப 3.30 வரையும் கல்வி பொதுத் தராதரப் உயர்தரப் பரீட்சை கடமை காரணமாக அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத கல்வி அமைச்சின் அலுவலர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு 2015.08.14 ஆம் திகதி மு.ப 8.30 தொடக்கம் மு.ப 11.30 வரையும் காலம் குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டது.

5.8. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127(ஆ) பிரிவிற்கமைய தமது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு நியாயமாக அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோருவதற்கு உரித்துண்டு. இதன் காரணமாக பயங்கரவாத செயல்கள் காரணமாக வட கிழக்கு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து நாட்டின் வேறு பிரதேசங்களில் வதிந்துள்ளவர்களுக்கு இவ்வசதிகள் தேர்தல்கள் ஆணையாளரால் செய்து கொடுக்கப்பட்டன. அவ்விண்ணப்பங்கள் தேர்தல்கள் ஆணையாளரினால் 2015.07.14 ஆம் திகதி வரை கையேற்கப்பட்டதோடு, அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 9558 ஆகும். இவ்வாக்காளர்களுக்காக 19 வாக்கெடுப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதோடு, அவை புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டன.

5.9. இத்தேர்தலின் போது 12,021 வாக்கெடுப்பு மாவட்டங்களுக்காக 12317 சாதாரண வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. இதில் 8847 வாக்கெடுப்பு நிலையங்கள் பாடசாலைக் கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

5.10. 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் வாக்காளரின் தேசிய அடையாள அட்டைக்கமைய அடையாளம் காணப்படல் வேண்டும். இருப்பினும், தேசிய அடையாள அட்டைகள் அனைத்து வாக்காளர்களிடமும் இல்லையென்பதால், அதற்குப் பதிலாக வேறு அடையாள ஆவணங்களை அறிமுகம் செய்வதற்கும் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தினால் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய தேர்தல்கள் திணைக்களத்தினால் பாராளுமன்றத் தேர்தலுக்காக 82,819 வாக்காளர்களுக்குத் தற்காலிக அடையாள அட்டைகள் புதிதாக விநியோகிக்கப்பட்டதாக தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிக்கையிட்டு இருந்தனர். அதற்கு மேலதிகமாக முன்னைய தேர்தல் சந்தர்ப்பங்களின் போது தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்த **125,366 தற்காலிக அடையாள அட்டைகள்** வரையில் நிகழ் நிலைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

5.11. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய அனைத்து வாக்காளர்களுக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்க வேண்டி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, வாக்காளர்களின் விபரம் மற்றும் வாக்களிக்கவுள்ள வாக்கெடுப்பு நிலையத்தை உள்ளடக்கி தேர்தல்கள் திணைக்களத்தினால் அச்சிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அவை வாக்காளர்களுக்கு 2015.07.29 ஆம் திகதி அஞ்சல் செய்யப்பட்டன.

5.12. தேர்தல்கள் ஆணையாளரினால் அரச சொத்துக்கள் தொடர்பில் அவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள் அவ்வாதனங்களை எவ்விதத்திலும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக ஈடுபடுத்தக் கூடாதென 2015.06.28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இவ்வறிவித்தல் வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடப்பட்டதோடு, அவ்வாறான சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றவுடன் விடயங்கள் ஆராய்ந்துப் பார்க்கப்பட்ட குறித்த நிறுவனத் தலைவர்களுக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கும் மற்றும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

5.13. சட்டரீதியான மற்றும் நீதியான தேர்தலொன்றை நடாத்துவதற்குப் பிரதான தடையாகவுள்ள சட்டமுறையற்ற தேர்தல் பிரச்சார அலுவல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு, சட்டமுறையற்ற பிரச்சார அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், பதாகைகள் என்பவற்றை அகற்றுவதற்கும் பொலிஸார் ஆர்வமூட்டப்பட்டதோடு, அப்பணிகளை ஆற்றிக் கொள்வதற்குத் தேவையான தொழிலாளர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளும் பொலிஸாருக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும், கட்சிச் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களின் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு அலுவல்களை மேற்கொள்ளுமாறு அனைத்து வேட்பாளர்களையும் அறிவுறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் தேர்தல்கள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டன.

5.14. அரச ஊடக நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய ஊடக நிறுவனங்கள் செய்திகள் உள்ளிட்ட ஏனைய நிகழ்ச்சி ஒலிபரப்புக்களின் போது கட்சிகளுக்கும் மற்றும் வேட்பாளர்களுக்கும் ஏற்படக்கூடிய அநியாயத்தை அகற்றுவதற்காக ஊடக நிறுவனங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஊடக வழிகாட்டி நெறிகள் அந்நிறுவனங்களுக்குத் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டதோடு, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்காக ஊடக பயன்பாடு தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

5.15. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 125 ஆம் பிரிவின் கீழ் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அஞ்சல் கட்டணமின்றி தேருநர்களுக்குப் பத்திரமொன்றை இலவசமாக அனுப்புவதற்குத் தேவையான வசதிகளை அஞ்சல்மா அதிபரூடாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வானலை பிரச்சார வசதிகளைப் பெற்றுக் கொடுக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றினூடாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

5.16. பாராளுமன்றத் தேர்தலுக்குரியதாக உள்நாட்டுக் கண்காணிப்பு நிறுவனங்கள் 10 இற்கு கண்காணிப்புக்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டதோடு, அவற்றில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறை செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய நிறுவனங்கள் இரண்டிற்கும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் தமது கண்காணிப்பாளர்களை நிறுத்தி வைப்பதற்கும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியில் நடமாடும் கண்காணிப்பு அலுவல்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. ஏனைய கண்காணிப்பு அமைப்புக்கள் நடமாடும் கண்காணிப்பாளர்களாக கலந்து கொண்டனர். வாக்கெண்ணல் அலுவல்கள் மற்றும் பெறுபேறுகளை அட்டவணையில் பதிதல் கண்காணிப்பு அலுவல்களுக்காகக் கண்காணிப்பு அமைப்புக்களின் கோரிக்கைக்கமைய சனாதிபதித் தேர்தலைப் போன்று பாராளுமன்றத் தேர்தலிலும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களில் வாக்கெண்ணல் அலுவல்கள் மற்றும் பெறுபேறுகளைப் பதிதல் அலுவல்களைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பு அமைப்புக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலகத்தில் இறுதி பெறுபேறை தயாரிக்கும் அலுவல்களைக் கண்காணிப்பதற்கும் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டன.

5.17. வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களாக ஆசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கம் (AAEA) மற்றும் தெற்காசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கம் (FEMBoSA) ஆகிய அமைப்புக்களின் கண்காணிப்பாளர்கள் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பில் கலந்து கொண்டனர். மேலும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களும் கலந்து கொண்டதோடு, அவர்களின் அனைத்து ஒருங்கிணைப்பு அலுவல்களும் குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

5.18. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் தேவையான பொருட்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களை அனுப்பி வைத்தல் 2015.08.16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதோடு, மாவட்டத்தினுள் அனைத்து அலுவலர்களும் பொது போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிடுமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததோடு, வெளி மாவட்டங்களிலிருந்து வருகைதந்திருந்த பணிக் குழுவினரும் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக பொதுப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொள்ள முடியாத வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் ஊடாக குறித்த பணியாட் குழுவினர் 2015.08.16 ஆம் திகதி பிற்பகலில் அறிக்கையிட்டனர்.

5.19. அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பு அலுவல்கள் 2015.08.17 ஆம் திகதி மு.ப 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப 4.00 மணிக்கு நிறைவடைந்ததன் பின்னர், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட ஏனைய பொருட்களாதியவை தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் அன்றைய தினம் கையளிக்கப்பட்டதன் பின்னர், வாக்கெண்ணல் நிலையங்களில் வாக்கெண்ணல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டன. மொத்த வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை 1600 ஆகும். அவற்றில் 317 அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களாகும். அஞ்சல் வாக்கெண்ணல் அலுவல்கள் வாக்கெடுப்புத் தினம் பி.ப 4.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதோடு, சாதாரண வாக்கெண்ணல் மண்டபங்கள் பலவற்றில் வாக்கெண்ணல் அலுவல்கள் பி.ப 7.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன. வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு முகவர்களாக போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி முகவர்களுக்கு வருகைதருவதற்குச் சந்தர்ப்பம் செய்யப்பட்டிருந்ததோடு, பெறுபேறுகளைத் தயாரிக்கும் நிலையங்களுக்கும் முகவர்களை நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவ்வாறு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவர்களை நியமனம் செய்வதற்கு மேலதிகமாக பொதுத் தேர்தலுக்குரியதாக வாக்கெண்ணல் பெறுபேறுகளை அட்டவணையில் பதிதல் ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு கட்சி சார்பாகவும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையினருக்கு வாக்கெண்ணல் தொகுதி மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முகவர்களை நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெண்ணல் மண்டபங்களுக்குத் தேவையான பாதுகாப்பு பொலிஸாரினால் வழங்கப்பட்டது.

5.20. வாக்கெண்ணலின் நிறைவில் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் மற்றும் மாவட்ட பெறுபேறு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தயாரிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதோடு, தேர்தல் மாவட்டங்கள் அனைத்திலும் ஒவ்வொரு கட்சி/ குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய பாராளுமன்றத் தேர்தல்களுக்குரிய பெறுபேறு 2015.08.19 ஆம் திகதிய 1928/03 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலுக்குரியதாக போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்கள், போட்டியிட்ட அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பெற்றுக் கொண்ட மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான விபரம் **XIV ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

06. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

6.1. அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் தொடர்பாக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்ட ஏற்பாடுகள் 2009.09.16 ஆம் திகதி சட்டமாக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்ற (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதோடு, புதிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதத்தில் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்திற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படல் வேண்டும். ஆயினும் அக்காலக்கெடுவினுள் தேர்தலொன்று நடாத்தப்படுமாயின் தேர்தலின் பின்னரான 30 நாட்காலப்பகுதிக்குள் விண்ணப்பங்களைக் கோர நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

6.2. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை என்பவற்றிற்கான தேர்தல்கள் நடாத்தப்படவிருந்தமை, அது தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் காரணமாக 2015 ஆம் ஆண்டினுள்ளும் கட்சிகளைப் பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தலை வெளியிடுவதற்குத் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

6.3. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4) (ஆ) பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்தின் ஆரம்பத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாகக் கருதப்படுவதற்குத் தகைமைகளைப் பெற்றுள்ள அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். அதற்கமைய 2015 ஆம் ஆண்டிற்குரிய கட்சிகளின் பெயர்ப்பட்டியல் 2015.01.31 ஆம் திகதிய 1899/46 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாக 64 கட்சிகள் பதிவு செய்யப்பட்டன. அக்கட்சிகளின் பெயர்ப்பட்டியல் **XV ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

6.4. 2015 ஆம் ஆண்டினுள் நான்கு (04) பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கையெடுத்ததோடு, அது தொடர்பான விபரம் **XVI ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

07. 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்.

2015 ஆம் ஆண்டினுள் மாகாண சபைகள் தொடர்பான தேர்தலொன்று நடாத்தப்படவில்லையென்பதோடு, வெற்றிடங்களை நிரப்புதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான விபரங்கள் **XVII அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது. இவ்வாண்டினுள் 65 மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

08. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

8.1. 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட இலக்கம் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

8.1.1. 1900/02 ஆம் இலக்க 2015.02.02 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்திற்கமைய 2002 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் 2015.02.28 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் நீதிமன்ற கட்டளையொன்று காரணமாக பிற்போடப்பட்டது.

8.1.2. 1907/50 ஆம் இலக்க 2015.03.27 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் 03 மாநகர சபைகள், 30 நகர சபைகள் மற்றும் 201 பிரதேச சபைகளின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2015 மே மாதம் 15 ஆம் திகதி நிறைவடைந்தது.

8.1.3. 1936/44 ஆம் இலக்க 2015.10.15 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலினால் 25 ஆம் அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (ஆ) பந்திக்கமைய 22 மாநகர சபைகளின் பதவிக் காலம் 2015 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டதோடு, 1936/58 ஆம் இலக்க 2015.10.16 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2015 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டது.

8.1.4. கடுவலை மாநகர சபை உள்ளிட்ட 9 நகர சபைகள் மற்றும் 55 பிரதேச சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்தமை காரணமாக 2015 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அச்சபைகளின் உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்தது.

8.2. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அத்தியாயம்) அமைய எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் வட்டார அடிப்படையில் நடாத்தப்பட வேண்டுமெனவும் அதற்காக நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் எழுந்த சிக்கலான நிலைமைகளின் அடிப்படையில் வட்டார நிர்ணயம் இதுவரை நிறைவடையாமை மற்றும் தேர்தலொன்றை நடாத்துவதற்குச் சாத்தியமான விதத்தில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் தேர்தலை நடாத்துவது சிக்கல்மிக்க நிலைமைக்குள்ளாகியுள்ளது.

8.3. 2015 ஆம் ஆண்டில் உள்ளூர் அதிகார சபைகளில் ஏற்பட்ட 114 உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புடைய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான விபரங்கள் முறையே **XVIII, XIX மற்றும் XX ஆம் இலக்க அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளன.

09 பணியாட் குழுவினர்.

9.1. புதிய பதவிகளின் உருவாக்கம்

தேர்தல்கள் திணைக்களம் 2015.11.17 ஆம் திகதி தொடக்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவாக மாற்றப்பட்டமை காரணமாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவல்களைப் பேணிச் செல்வதற்காக தனியான பணியாட் குழுவொன்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்து அனுமதித்துக் கொள்ளல், தேர்தல்கள் திணைக்களத்தில் பணியிலீடுபட்டிருந்த அனைத்து பணியாட் குழுவினரையும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்து கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

9.1.1. தேர்தல்கள் ஆணைக்குழு தனது பணிகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு செயலாளர் ஒருவரின் தலைமையிலான ஆணைக்குழு செயலாளர் அலுவலகமொன்று ஸ்தாபிக்கபபட்டது. அதற்காக பதவிப் பெயர்களின் கீழ் 32 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டதோடு, 2015 ஆம் ஆண்டில் செயலாளர் ஒருவர் மாத்திரம் நியமனம் செய்யப்பட்டார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் முதலாவது செயலாளராக இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற அலுவலரான சட்டத்தரணி திரு. எச்.எம்.ரீ.டி. ஹேரத் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்.

9.1.2. நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1014 ஆம் இலக்க 2015.05.11 ஆம் திகதிய கடிதத்திற்கமைய இத்திணைக்களத்தின் கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விஷேட வகுப்பின் நிருவாக அலுவலர் பதவியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

9.1.3. நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1014 ஆம் இலக்க 2015.05.11 ஆம் திகதிய கடிதத்திற்கமைய இத்திணைக்களத்திற்கு இலங்கை திட்டமிடல் சேவையின் முதலாம் தரத்தின் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்) பதவியொன்றும் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் III/II ஆம் வகுப்பின் உதவி/ பிரதி பணிப்பாளர் பதவியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

9.1.4. நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1014(1) ஆம் இலக்க 2015.11.24 ஆம் திகதிய கடிதத்திற்கமைய இத்திணைக்களத்திற்கு இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் பதவியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

9.1.5. நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1014 ஆம் இலக்க 2015.12.30 ஆம் திகதிய கடிதத்திற்கமைய இலங்கை கணக்காளர் சேவையின் விஷேட வகுப்பின் தலைமை நிதி அலுவலர் பதவியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

9.1.6. நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1014 ஆம் இலக்க 2015.12.30 ஆம் திகதிய கடிதத்திற்கமைய இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் வகுப்பின் பதவி (ஆதன முகாமைத்துவம் மற்றும் பெறுகை) இலங்கை கணக்காளர் சேவையின் முதலாம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

9.1.7. தேர்தல்கள் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்கள் அதிகரித்தமை காரணமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டினுள் புதிதாக சாரதிகள் சேவையின் ஒரு பதவியும் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 12 பதவிகளும் உருவாக்கப்பட்டன.

9.1.8. விஷேட தேவைப்பாடுகளின் அடிப்படையில் இரு அரச கரும மொழிகளிலும் பணியாற்றிக் கொள்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அமைய முகாமைத்துவ உதவியாளர்கள் 12 பேரும், பொது நிருவாக 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய மற்றும் 2014.12.28 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய 2015.02.02 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் திணைக்களத்தின் ஆவண உதவியாளர் III ஆம் வகுப்பின் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

9.1.9. அலுவலக கனிட்ட ஊழியர் சேவையில் நிலவிய 5 வெற்றிடங்களுக்காக 24/95 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் கனிட்ட ஊழியர் சேவைப் பிரமாணங்களுக்கு அமைவாக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தகைமையுடைய 5 பேர் 2015.02.02 ஆம் திகதி தொடக்கம் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

9.1.10. தற்காலிக/ அமய (அன்றாட)/ பதிலீட்டு/ ஒப்பந்த அல்லது உதவி அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்காக 2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய நிரந்தர நியமனம் வழங்கல் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கமைய தேர்தல்கள் திணைக்களத்தில் அமைய அடிப்படையில் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த 54 பேர் அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின் III ஆம் வகுப்பிற்குரியதாகவும் மற்றும் 04 பேர் சாரதிகள் சேவையின் III ஆம் வகுப்பிற்குரியதாகவும், ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின அனுமதிக்குட்பட்டு 2015.02.02 ஆம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

9.1.11. தேர்தல்கள் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவிய 38 ஆவண உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதோடு, அதற்கமைய விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்திருந்த 428 பேருக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினூடாக பரீட்சையொன்று நடாத்தப்பட்டதோடு, அப்பரீட்சையின் பெறுபேறுகள் 2015.12.30 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றது.

9.2. புதிய நியமனங்கள் (பதவிநிலை)

9.2.1. பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சின் செயலாளரின் 75/10/5168 ஆம் இலக்க 2015.03.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2015.04.02 ஆம் திகதி தொடக்கம் இத்திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் திரு. இந்திக்க கயான் பத்திரண அவர்கள் 2015.05.18 ஆம் திகதி தொடக்கம் மொணராகலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டார்.

9.2.2. பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சின் செயலாளரின் 75/10/4749 ஆம் இலக்க 2015.04.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2015.04.29 ஆம் திகதி தொடக்கம் இத்திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் திரு. ரி. அகிலன் அவர்கள் 2015.06.30 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டார்.

9.2.3. பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 75/10/5273 ஆம் இலக்க 2015.10.29 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2015.11.02 ஆம் திகதி தொடக்கம் இத்திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் திரு. டப்ளிவ்.ஏ.எல். விக்கிரமஆரச்சி அவர்கள் 2015.12.01 ஆம் திகதி தொடக்கம் நுவரெலியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டார்.

9.2.4. 2015.10.10 ஆம் திகதிக்கு தேர்தல்கள் திணைக்களத்தில் காணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 26 ஆகும். அது தொடர்பாக பொது நிருவாக அமைச்சிற்கு அறிவித்தமையின் பயனாக அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2015 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர்களில் 20 பேர் பெற்றுக் கொடுக்கப்பட்டனர்.

9.3. பதவியுயர்வுகள்

9.3.1. இத்திணைக்களத்தின் கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றி இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பின் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள் தலைமை அலுவலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) பதவியில் நியமனம் செய்யப்பட்டார்.

9.4. இடமாற்றங்கள்

9.4.1. குருணாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிய இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரி.ஏ.சீ.என். தலங்கம அவர்கள் 2015.03.23 ஆம் திகதி தொடக்கம் கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார்.

9.4.2. அநுராதபுரம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே.ஜே.எஸ். மாதவ அவர்கள் 2015.04.02 ஆம் திகதி தொடக்கம் குருணாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டார்.

9.4.3. பதுளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக சேவையாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர்.ஆர்.ஏ.எஸ்.கே. ரத்நாயக்க அவர்கள் 2015.04.16 ஆம் திகதி தொடக்கம் அனுராதபுர மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

9.4.4. மொணராகலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் சேவையாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. சுரங்க அம்பகஹதென்ன அவர்கள் 2015.05.07 ஆம் திகதி தொடக்கம் பதுளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

9.4.5. புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. ரகுநாதன் அவர்கள் 2015.06.04 ஆம் திகதி தொடக்கம் கம்பஹா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

9.4.6. முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். சசீலன் அவர்கள் 2015.06.04 ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

9.4.7. மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிய அரச முகாமைத்துவ சேவையின் விஷேட வகுப்பை சேர்ந்த திரு. ஏ.எம். கபீர் அவர்கள் 2015.06.04 ஆம் திகதி தொடக்கம் புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.

9.4.8. 2015 வருடாந்த இடமாற்றத்தின் கீழ் அரச முகாமைத்துவ சேவையின் இரண்டு அலுவலர்கள் திணைக்களத்திலிருந்து வெளியில் இடமாற்றம் பெற்றுச் சென்றதோடு, அதற்குப் பதிலாக ஒரு அலுவலர் மாத்திரம் வருகைதந்துள்ளார்.

9.4.9. திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத்தின் கீழ் இத்திணைக்களத்திற்கு வருகை தருவதற்கு விருப்பம் தெரிவித்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 15 அலுவலர்களும் சாரதிகள் சேவையின் இரண்டு பேரும் இத்திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

9.4.10. திணைக்களத்திற்கு வெளியில் அரச முகாமைத்துவ சேவையின் 15 அலுவலர்களும் ஒரு அபிவிருத்தி அலுவலரும், அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின் அலுவலரொருவரும் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். இவ்வனைத்து அலுவலர்களும் தேர்தல்கள் திணைக்களத்திற்காக ஆற்றிய சேவையை மெச்சுகின்றேன்.

9.5. திணைக்களத்திலிருந்து விடுவிப்புச் செய்தல்.

9.5.1. யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக சேவையாற்றிய இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. குகநாதன் அவர்கள் பொது நிருவாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சின் செயலாளரின் 76/1/15/18(1)XI ஆம் இலக்க 2015.02.27 ஆம் திகதிய கடிதத்திற்கிணங்க பொது நிருவாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சில் கடமைகளைக் கையேற்பதற்காக 2015.03.16 ஆம் திகதி தொடக்கம் தேர்தல்கள் திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் இத்திணைக்களத்திற்காக ஆற்றிய சேவையை மெச்சுகின்றேன்.

9.5.2. நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக பணியாற்றிய இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எச்.ஏ.எஸ். பிரனாந்து அவர்கள் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவம் அமைச்சின் செயலாளரின் 75/10/4160 ஆம் இலக்க 2015.10.05 ஆம் திகதிய கடிதத்திற்கிணங்க 2015.10.05 ஆம் திகதி தொடக்கம் பிரதமர் அலுவலகத்தில் கடமைகளைக் கையேற்பதற்காக தேர்தல்கள் திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் இத்திணைக்களத்திற்காக ஆற்றிய சேவையை மெச்சுகின்றேன்.

9.5.3. வவுனியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றிய அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II திரு. ஆர். முகுந்தன் அவர்கள் இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தமை காரணமாக அரச முகாமைத்துவ உதவியாளர் பதவியிலிருந்து விலகி அப்பதவியில் கடமைகளைக் கையேற்கத்தக்கவாறு 2015.11.08 ஆம் திகதி சேவையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

9.5.4. அரச முகாமைத்துவ உதவியார் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டி பரீட்சையில் சித்தியடைந்தமை காரணமாக திணைக்களத்தின் கனிட்ட ஊழியர் சேவையில் கடமையாற்றிய முறையே பொலன்னறுவை, கொழும்பு ஆகிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் பணியாற்றிய திரு. என்.ஜீ.ரி.பீ. வீரசேகர மற்றும் செல்வி ஜீ.டீ. சசிக்கா நிவந்தி தேர்தல்கள் செயலகத்தில் செல்வி.எம்.ஏ.ஜீ. பிரசில்டா பிரசன்ன மற்றும் செல்வி. பீ.எஸ். கீதாஞ்சலி ஆகியோர் அலுவலக கனிட்ட ஊழியர் சேவையிலிருந்து விலகி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தின் கடமைகளைக் கையேற்கத்தக்கவாறு 2015.09.14 ஆம் திகதி சேவையின் பின்னர், விடுவிடுப்புச் செய்ய நடவடிக்கையெடுக்கப்பட்டது.

9.5.5. 2015 ஆம் ஆண்டின் அரச சேவை மற்றும் வேறு துறைகளில் பதவிகள் கிடைத்தமை காரணமாக தேர்தல்கள் திணைக்களத்தில் சேவையாற்றிய திரு.யூ.ஏ.ஏ. பிரியதர்ஷன (இரத்தினபுரி), செல்வி. ஜீ.பி.சீ.டீ. விஜேசிங்க (இரத்தினபுரி), செல்வி. எம்.ஏ.டீ.ஜீ. மடவல (அம்பாந்தோட்டை) மற்றும் திரு. கே.டீ.எல்.என்.ரி. ரணசிங்க (கண்டி) ஆகிய அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் இத்திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிப்புச் செய்யப்பட்டனர்.

9.5.6. கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றிய அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின் III திருமதி. பீ.எச்.எம். ஸ்ரீமது அவர்கள் தனிப்பட்ட காரணங்களால் 2015.01.28 ஆம் திகதி அரச சேவையிலிருந்து கேட்டு விலகிக் கொண்டனர்.

9.5.7. தேர்தல் திணைக்களத்தில் கடமையாற்றி வேறு திணைக்களங்கள், நிறுவனங்களில் சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்ட மற்றும் அரச சேவையிலிருந்து விலகிய மேற்படி அனைத்து அலுவலர்களும் இத்திணைக்களம் சார்பாக ஆற்றிய சேவைகளை இச்சந்தர்ப்பத்தில் மெச்சுகின்றேன்.

9.6. இளைப்பாறல்

9.6.1. 2015 ஆம் ஆண்டினுள் தேர்தல்கள் திணைக்களத்தின் இரண்டு பதவிநிலை அலுவலர்களும், அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் ஏழு அலுவலர்களும் மற்றும் அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின் இரண்டு அலுவலர்களும் இளைப்பாறினர்.

9.6.2. முப்பத்துமூன்று வருடங்களுக்கு அண்மித்த செவைக் காலத்தின் பின்னர், தேர்தல்கள் ஆணையாளர் பதவியிலிருந்து 2015.06.06 ஆம் திகதி இளைப்பாறிய திரு. மஹிந்த தேசப்பிரய அவர்கள், 1982.07.01 ஆம் திகதி இலங்கை நிருவாக சேவையில் இணைந்து, ஒருவருடப் பயிற்சிகளின் பின்னர் 1983.07.01 ஆம் திகதி தொடக்கம் தேர்தல்கள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டதோடு, 1983.08.01 ஆம் திகதி தொடக்கம் 1983.12.31 ஆம் திகதி வரை உதவித் தேர்தல்கள் ஆணையாளராக கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டார். 1984.01.01 ஆம் திகதி தொடக்கம் திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக கடமைகளைக் கையேற்றுக் கொண்டதோடு, 1987.04.28 ஆம் திகதி வரை திருகோணமலை மாவட்டத்தில் பணியாற்றியதன் பின்னர், இடமாற்றம் பெற்று 1987.04.29 ஆம் திகதி தொடக்கம் மாத்தறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக கடமைகளைக் கையேற்றுக் கொண்டார். மாத்தறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் 1993.01.06 ஆம் திகதி வரை பணியாற்றிய அவர் 1993.01.07 ஆம் திகதி கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று உதவித் தேர்தல்கள் ஆணையாளராக 1994.12.31 ஆம் திகதி வரை பணியாற்றினார். அதன் பின்னர், 1995.01.01 ஆம் திகதி தொடக்கம் 1996.02.14 ஆம் திகதி வரை களுத்துறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும், 1996.02.15 திகதி தொடக்கம் 2000.01.31 ஆம் திகதி வரை காலி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும், மீண்டும் 2000.02.01 ஆம் திகதி தொடக்கம் 2006.10..31 வரை கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திலும் என பல மாவட்டங்களில் சேவையாற்றியதன் பின்னர், 2006.11.01 ஆம் திகதி தொடக்கம் தேர்தல்கள் செயலகத்தில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக (நிருவாகம்) நியமனம் செய்யப்பட்டார். பின்னர், 2010.11.01 ஆம் திகதி தொடக்கம் 2011.03.24 ஆம் திகதி வரை தேர்தல்கள் செயலகத்தில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்ட திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் அப்போதைய தேர்தல்கள் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் 2011.03.24 ஆம் திகதி இளைப்பாறியதன் பின்னர், தேர்தல்கள் திணைக்களத்தின் ஆறாவது தேர்தல்கள் ஆணையாளராக 2011.03.25 ஆம் திகதி கடமைகளைக் கையேற்றுக் கொண்டார்.

9.6.3. அவர்கள் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்ட பின்னர், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் பலரதும் அவதானத்திற்குட்பட்ட 2015 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பன அவரினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன. மேற்படி அனைத்து தேர்தல்களின் போதும் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கும், தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வதற்காக அரசியல் கட்சிகளினால் நியமனம் செய்யப்படுகின்ற நிரந்தர முகவர்களை உள்ளடக்கிய நிலையியற் குழுவை நிறுவியதன் ஊடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரச வளங்கள் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், ஊடக வழிகாட்டு நெறிகளை வெளியிடல், ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்காக ஊடக பாவனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தப்பட்டது. தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் முறைப்பாட்டு நிலையங்களை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய பொலிஸ் பிரிவுகளைச் செயற்படுத்துதல் ஊடாக முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்கு வசதி செய்து நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான ஏராளமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

9.6.4. தேர்தல்கள் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் 60 வயது பூர்த்தியடைந்தமை காரணமாக 2015.06.06 ஆம் திகதி அரச சேவையிலிருந்து இளைப்பாறிய போதும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 49(3)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் வரை அப்போது தேர்தல்கள் ஆணையாளர் பதவி வகித்த அவருக்குத் தேர்தல்கள் ஆணையாளர் பதவியின் கடமைகளை மேற்கொள்ளத்தக்கவாறான ஏற்பாடுகளின்

அடிப்படையில் 2015.11.17 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்படும் வரை தேர்தல்கள் ஆணையாளர் பதவியின் கடமைகளை ஆற்றினார். 2015.11.17 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்ட போது ஆணைக்குழுவின் தவிசாளராக திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். அதற்கமைய அன்றைய தினம் தொடக்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக அலுவல்களை மேற்கொண்டு வருகிறார்.

9.6.5. 2015.09.07 ஆம் திகதி புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவிருந்த ஓய்வுபெற்ற திரு. ஏ.எச்.எம். கபீர் அவர்கள் 2011.04.30 ஆம் திகதி தொடக்கம் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விஷேட வகுப்புக்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர், 2012.08.02 ஆம் திகதி தொடக்கம் கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் நிருவாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன் பின்னர் வவுனியா, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் பதிற்கடமை உதவித் தேர்தல்கள் ஆணையாளரொருவராக பணியாற்றியதன் பின்னர், 2015.06.04 ஆம் திகதி தொடக்கம் புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாராக நியமனம் செய்யப்பட்டார். 2015.09.07 ஆம் திகதி 60 வயது பூர்த்தியடைந்தமை காரணமாக இளைப்பாறிய திரு. ஏ.எச்.எம். கபீர் அவர்கள் இதுவரை பதிற்கடமை உதவித் தேர்தல்கள் ஆணையாளராக புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். அவர் தேர்தல்கள் திணைக்களத்திற்காக ஆற்றிய சேவைகளை மெச்சுகின்றேன்.

9.6.6. தேர்தல்கள் திணைக்களத்தில் 2015 ஆம் ஆண்டில் இளைப்பாறிய ஏனைய அலுவலர்களில் மொணராகலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் திரு. ஜே.ஏ.எம். ஜயரத்ன அவர்கள் 1978.03.08 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் பணிகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டு 2015.01.20 ஆம் திகதி இளைப்பாறும் போது மொணராகலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதம அரச முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி வந்தார். 1987.06.15 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் பணிக்காக இணைந்து கொண்ட திருமதி. ஏ.டீ. அனுலாவதி அவர்கள் 2015.05.16 ஆம் திகதி இளைப்பாறும் போது இரத்தினபுரி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதம அரச முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றியதோடு, 1989.12.01 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தில் இணைந்து கொண்ட திரு. ஜே.எம். கருணாரத்ன அவர்கள் 2015.07.18 ஆம் திகதி இளைப்பாறும் போது பதுளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதம அரச முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றினார். அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் காலி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் திருமதி. ஜீ.டப்ளிவ்.எஸ்.பி. சமரதாஸ அவர்கள், கம்பஹா அலுவலகத்தின் திருமதி. ஆர்.ஜீ.பீ.ஆர். ராஜபக்ஷ, களுத்துறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் திரு. கே.கே.டீ. ரத்நாயக்க, காலி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் செல்வி. எச்.வீ.சீ. கருணாரத்ன ஆகியோரும், அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின், காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் திரு. ஜீ.எச்.சீ. அத்தநாயக்க, மற்றும் இரத்தினபுரி தேர்தல்கள் அலுவலகத்தின் திரு. ஏ.பீ. ஜயசேன, ஆகியோரும் 2015 ஆம் ஆண்டில் இளைப்பாறினர். இளைப்பாறிய அனைவரும் தேர்தல்கள் திணைக்களத்திற்காக ஆற்றிய பணிகளை மெச்சுகின்றேன். இளைப்பாறிய அலுவலர்கள் ஊழியர்கள் தொடர்பான விரிவான அறிக்கை **XXI ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

9.6.7. 1991.11.04 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தில் பணிக்காக இணைந்து அனுராதபுர மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் சேவையின் பின்னர், இடமாற்றம் பெற்று குருணாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. ஆர்.ஜீ.டீ. ரன்கொத் அவர்கள் சுகயீனமாகவிருந்து 2015.09.18 ஆம் திகதி மரணமடைந்ததோடு, அவர் தேர்தல்கள் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களிடமும் நட்புடன் அலுவல்களை மேற்கொண்ட அலுவலரொருவரென்பதோடு, தேர்தல்கள் திணைக்களம் சார்பாக ஆற்றிய சேவையை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

10. பயிற்சிகள்

10.1. *உள்நாட்டு*

10.1.1. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம், இலங்கை மன்றம், தேசிய தொழிற்கல்வி நிறுவனம், அரச அச்சக நிறுவனம், களனி பல்கலைக்கழகம், பிராக் நிறுவனம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திறன் விருத்தி நிதியம், அரச கரும மொழிகள் திணைக்களம், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் நிருமாண இயந்திரப் பொறிகள் பயிற்சி நிலையம் போன்ற நிறுவனங்களினால் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் 45 பதவிநிலை அலுவலர்களும், 42 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்களும் அலுவலக கனிட்ட ஊழியர் சேவையின் 05 அலுவலர்களும், 30 சாரதிகளும் மற்றும் இரண்டு வேறு அலுவலர்களும் அனுப்பி வைக்கப்பட்டனர். உண்ணாட்டு பயிற்சிகளுக்காக 2015 ஆம் ஆண்டு 1,122,350.00 ரூபா தொகையொன்று செலவு செய்யப்பட்டது.

10.1.2. தலைமை அலுவலகம் உள்ளிட்ட மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் கணக்காய்வு விசாரணைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு, பொதுவான நிருவாகம், கணக்கு அலுவல்கள், களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பாகவும் தேருநர் இடாப்பு மீளாய்வு மற்றும் தேர்தல் பூர்வாங்க அலுவல்கள் ஒருங்கிணைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பில் பதவிநிலை அலுவலர்களும் இதர அலுவலர்களும் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு பயிற்சி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன.

10.2. வெளிநாட்டு

10.2.1. 2015.01.18 ஆம் திகதி தொடக்கம் 2015.01.28 ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெற்ற தேர்தல் முகாமைத்துவம் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வில் தேர்தல்கள் செயலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஜே.ஏ.எஸ்.பீ. ஜயசிங்க மற்றும் திரு. பீ.ஆர்.என்.எச். ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

10.2.2. 2015.03.02 ஆம் திகதி தொடக்கம் 2015.03.07 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற தேர்தல்கள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியில் அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. டீ.ரி.ஐ. விக்கிரமரத்ன மற்றும் மன்னார் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் டீ.சீ. அரவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

10.2.3. 2015.04.21 ஆம் திகதி தொடக்கம் 2015.05.04 ஆம் திகதி வரை தென்கொரியாவின் இஜியான் நகரத்தில் A web செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டத் தேர்தல்கள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களான திரு. கே.ஜே.எஸ். மாதவ (அனுராதபுரம்), திரு. டப்ளிவ்.எச்.ஆர். விஜயகுமார (மாத்தறை), திரு. ஜீ.டீ.என். த சில்வா (கேகாலை), திரு. ஆர்.வீ.என். குணவர்தன (கொழும்பு மாவட்டம்), திரு. எச்.ஐ.ஆர். ஹத்துருசிங்க (பொலன்னறுவை), திரு. யூ.டீ.டீ. சந்திரரத்ன (அம்பாந்தோட்டை) மற்றும் தேர்தல்கள் செயலகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் திரு. ஜீ.ஆர்.ஏ.கே. கம்லத் மற்றும் கணக்காளர் எச்.டப்ளிவ்.என். குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

10.2.4. 2015.06.21 ஆம் திகதி தொடக்கம் 2015.07.01 ஆம் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற நிதி முகாமையாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் தேர்தல்கள் செயலகத்தின் தலைமைக் கணக்காளர் திரு. ஈ.ஏ. வீரசேன கலந்து கொண்டார்.

10.2.5. 2015.09.15 ஆம் திகதி தொடக்கம் 2015.09.25 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற தேர்தல்கள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியில் களுத்துறை மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. எச்.ஆர்.பீ. பிரீஸ் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களான திரு. பீ. ரகுநாதன் (கம்பஹா), திரு. ஆர். சசீலன் (மட்டக்களப்பு), திரு. எஸ்.டப்ளிவ். வெல்கம (திருகோணமலை) ஆகிய அலுவலர்களுடன் தேர்தல்கள் செயலகத்தில் தகவல் தொழிநுட்ப உதவிப் பணிப்பாளர் (ப.க) திரு டப்ளிவ்.ஏ. ரஞ்சன் நிசாந்த அவர்களும் கலந்து கொண்டார்.

10.2.6. 2015.11.17 ஆம் திகதி தொடக்கம் 2015.11.26 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. சுரங்க அம்பகஹதென்ன அவர்கள் கலந்து கொண்டார்.

10.2.7. 2015.11.27 ஆம் திகதி தொடக்கம் 2015.12.05 ஆம் திகதி வரை தென்கொரியாவில் இஜியான் நகரத்தில் A web செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல்கள் முகாமைத்துவம் பயிற்சியில் காலி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஏ.பி.ஐ த சில்வா மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களான திரு. ஜே.ஏ.எஸ்.பீ. ஜயசிங்க மற்றும் திரு. பீ.ஆர்.என்.எச். ரத்நாயக்க மற்றும் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்) திரு. பீ.சீ.பீ. த சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

10.3. வெளிநாட்டு உத்தியோகபூர்வ சுற்றுலாக்கள்

10.3.1. 2015.03.18 ஆம் திகதி தொடக்கம் 2015.03.21 ஆம் திகதி வரை திமோர் லெஸ்தே குடியரசில் நடைபெற்ற ஆசிய தேர்தல்கள் தரப்பினர்களின் மாநாட்டில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் திரு. எம்.எம். மொஹமட் அவர்கள் கலந்து கொண்டார்.

10.3.2. 2015.09.10 ஆம் திகதி தொடக்கம் 2015.09.15 ஆம் திகதி வரை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அவர்கள் நோர்வே நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தேர்தல் கண்காணிப்பில் கலந்து கொண்டார்.

10.3.3. 2015.12.07 ஆம் திகதி தொடக்கம் 2015.12.13 ஆம் திகதி வரை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. எம்.கே.எஸ்.எஸ். ரத்நாயக்க அவர்கள் இந்துனேஷியாவில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் கண்காணிப்பில் கலந்து கொண்டார்.

10.3.4. 2015.12.20 ஆம் திகதி தொடக்கம் 2015.12.24 ஆம் திகதி வரை மொங்கொலியாவில் நடைபெற்ற மியன்மார், இலங்கை மற்றும் கம்போடிய பாராளுமன்றத் தேர்தல் அனுபவங்கள் தொடர்பான கலந்துரையாடலில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் திரு. எம்.எம். மொஹமட் அவர்கள் கலந்து கொண்டார். இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளவிருந்த கொழும்பு உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ். அச்சுதன் அவர்கள் வீசா பெற்றுக் கொள்வது தாமதமடைந்தமை காரணமாக அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள முடியாது போனமை கவலைக்குரிய விடயமொன்றாகும்.

10.4. மேற்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினாலும், தேர்தல் கண்காணிப்புப் பணிகள் மற்றும் கலந்துரையாடல்கள்/ விரிவுரைகளில் கலந்து கொண்டமையூடாக அலுவலர்கள் பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் பயிற்சிகள் தேர்தல்கள் திணைக்களத்தின் எதிர்காலப் பணிகளுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

11. நிருமாணங்களும் சொத்துக்களும்

11.1. கம்பஹா மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ விடுதி நிருமாணத்திற்கான அடிக்கல் 2015.10.16 ஆம் திகதி நடப்பட்டதுடன், புதிய நிருமாணத்திற்கான ஒப்பந்தம் 260/1/2, முதலாம் மாடி, கண்டி வீதி, யக்கல தெற்கு, யக்கல என்ற முகவரியில் அமையப் பெற்றுள்ள யுனைடட் லங்கா நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளின் அடிப்படையில் அப்பணிகளை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்ட போதும், 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலை போன்றே பொதுத் தேர்தலின் போதும் உத்தியோகபூர்வ விடுதி நிருமாணிக்கப்படவுள்ள காணியை தேர்தல்களுக்குரியதாக வாகனங்களை நிறுத்துமிடமாகப் பயன்படுத்த நேரிட்டமை, வருட இறுதியில் ஏற்பட்ட பாதகமான காலநிலை காரணமாக அதிகளவு மண் நிரப்பி நிருமாணிக்கப்படவுள்ள காணியாக காணப்பட்டமை காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக நிருமாணப் பணிகளில் தாமதமொன்று ஏற்பட்டது. இருப்பினும் முதலாம் மாடி வரையான அலுவல்களை 2015 ஆம் ஆண்டு நிறைவடையும் போது நிறைவு செய்வதற்குப் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் சந்தர்ப்பம் கிடைத்ததென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

11.2. தேர்தல்கள் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழுவாக மாற்றப்பட்டமை, தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல்கள் செயலக அலுவலகத்தினுள் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டமை காரணமாக தேர்தல்கள் செயலகத்தினுள் காணப்பட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) பிரிவும் மற்றும் ஆவண காப்பகமும் அகற்றப்பட்டு ஆணைக்குழுவின் அலுவலகத்தை ஸ்தாபிக்கும் அலுவல்கள் 2015 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அப்பணிகள் தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டது.

11.3. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோரின் உத்தியோகபூர்வ விடுதிகளில் செய்யப்பட வேண்டியிருந்த அவசர பழுதுபார்ப்புக்கள் 2015 ஆம் ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டுத் தொகையினுள் ஆற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

11.4. 2015 ஆம் ஆண்டினுள் தேர்தல்கள் திணைக்களத்திற்குப் புதிதாக பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள்

தொடர் இலக்கம்	கொள்வனவு செய்யப்பட்ட திகதி	முதல் பதிவுத் திகதி	பெறுமதி	வாகன இலக்கம்
01	2015.01.02	2015.01.02	7,400,000.00 ரூபா	CAD – 1251
02	2015.04.23	2015.04.23	6,390,000.00 ரூபா	PG – 1775
03	2015.04.24	2015.04.24	6,390,000.00 ரூபா	PG – 1781
04	2015.04.24	2015.04.24	6,390,000.00 ரூபா	PG – 1782
05	2015.04.24	2015.04.24	6,390,000.00 ரூபா	PG – 1783
06	2015.04.24	2015.04.24	6,390,000.00 ரூபா	PG – 1784
07	2002.01.16	2002.01.16	வேறு அமைச்சுக்களிலிருந்து கையேற்கப்பட்ட வாகனங்கள்	GL – 8082
08	2011.11.28	2011.11.28		KR – 3011
09	2012.07.02	2012.07.02		PE - 1860

11.5. தேர்தல்கள் திணைக்களம் வசமிருந்த நல்ல ஓட்ட நிலைமையைக் கொண்டிராமை காரணமாக விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் விபரம் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விலைகள் தொடர்பான விபரங்கள்

வாகன இலக்கம்	வாகன வகை	விற்பனை செய்யப்பட்ட விலை	விற்கப்பட்ட திகதி
56 – 7471	இசுசு டபல் கெப்	1,275,000.00 ரூபா	2015.07.27
57 – 6534	இசுசு டபல் கெப்	1,275,000.00 ரூபா	2015.07.27
53 – 6225	இசுசு டபல் கெப்	1,085,000.00 ரூபா	2015.07.27
57 – 6533	இசுசு டபல் கெப்	1,458,000.00 ரூபா	2015.07.28
53 – 1857	இசுசு டபல் கெப்	1,070,000.00 ரூபா	2015.07.28
56 – 7469	இசுசு டபல் கெப்	1,400,999.00 ரூபா	2015.07.29
53 – 6224	இசுசு டபல் கெப்	1,012,600.00 ரூபா	2015.07.29

11.6. மேற்படி தகவல்களுக்கமைய 2015.12.31 ஆம் திகதிக்கு தேர்தல்கள் திணைக்கள வசமிருந்த மொத்த வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம்

கார்	ஜீப்	கெப்	வேன்	க்ரு கெப்	லொறி	மோட்டார் சைக்கிள்
12	03	36	3	01	01	01

12. கணக்காய்வு மற்றும் நிதிசார் தகவல்கள்

12.1. 2009.06.09 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முகாமைத்துவ ஆண்டினுள் 4 கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடாத்த வேண்டும். 2015 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்குரிய பூர்வாங்க அலுவல்கள் காரணமாக நிலவிய நிலைமையின் கீழ் 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

12.2. தேர்தல்கள் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2015 ஆம் ஆண்டினுள் தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 23 கணக்காய்வு விசாரணைகள் நடாத்தப்பட்டு அவை தொடர்பான அவதானிப்புக்களைக் குறித்த பிரிவுகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும், அதற்கமைய தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

12.3. 2015 ஆம் ஆண்டில் வெவ்வேறு விடயங்களின் கீழ் 08 கணக்காய்வு விசாரணைகள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றுக்குரிய காலப்பகுதியினுள் பதிலளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

12.4. சனாதிபதித் தேர்தலுக்கு 2706 மில்லியன் ரூபா செலவாகியதோடு, பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு 2975 மில்லியன் ரூபா செலவாகியது. கடந்த வருடத்தில் பகுதி பகுதியாக நடாத்தப்பட்ட மாகாண சபைகளின் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாகத் தேர்தல்களை நடாத்துவதற்கான செலவினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த தேசிய மட்ட இரண்டு தேர்தல்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. தீவு முழுவதிலும் ஒரே தடவையில் தேர்தல்கள் நடாத்தப்பட்டமை செலவினங்கள் குறைவடையக் காரணமாகும்.

12.5. 2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பைத் தயாரிப்பதற்காக 90 மில்லியன் ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளதோடு, 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பைத் தயாரிப்பதற்காகச் செலவிடப்பட்ட செலவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வாண்டில் தேருநர் இடாப்பைத்

தயாரிப்பதற்கான செலவுகள் 17 மில்லியன் ரூபா வரையில் குறைவடைந்துள்ளது. சனாதிபதித் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட தேருநர் இடாப்புக்களைப் பாராளுமன்றத் தேர்தலுக்காக மீண்டும் பயன்படுத்தியமை, மீண்டெழும் செலவினங்களைச் சிக்கனமாகச் செய்தமை என்பன காரணமாக இவ்வாறு செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கு முடிந்தது.

12.6. 2015 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்கள் 5803 மில்லியன் ரூபாவாகும். 2014 ஆம் ஆண்டில் அச்செலவினங்கள் 2095 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. முழுமையாக நோக்கும் போது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவினங்கள் பாரிய அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2015 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்கள் அதிகளவில் அதிகரித்தமைக்குக் காரணம் சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை நடாத்தியமை நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளன.

